திருமறைநூல் நாடக வரிசை – 2

# மண்ணே சாட்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணே சாட்சி

எழுதியவர்

செ.அ.அழகராஜா

நாடகப் பிரதியாக்கப் பகுதி

திருமறைக் கலாமன்றம்

அட்டைப்படம் : ரமணி

படங்கள் உள்ளே : சாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CENTRE FOR PERFORMING ARTS

திருமறைக் கலாமன்றம்

## திருமறைநூல் நாடகவரிசை

திருமறை நூல் உலகப்பொதுமை வாய்ந்தது! பல்மொழி மக்களும் படித்து இன்புறும் தகமை வாய்ந்தது! அதில் ஆய்வுக்குரியவை ஆயிரமாயிரம் இருப்பினும், ஆழமான ஆணித்தரமான, சிந்தனைகளைத் தூண்டும் அமுதஊற்றாகவும் அது விளங்குகிறது.

இத்தகைய தலை சிறந்த இலக்கியத்தை நாடகவரிசை நூல்களாக்கி நற்றமிழ் உலகிற்கு நல்க வேண்டும் என்ற நல்எண்ணம் நம்முள் பல்லாண்டு துளிர்த்திருந்தது. இளைய வயதினரும், முதியவரும், கற்றவரும், மற்றவரும் நாடக உருவத்தில் திருமறை நூலையும் படித்துப் பயன் பெறவேண்டும் என்ற அக்கனவு இப்போது நிறைவு பெறத் தொடங்கியுள்ளது.

திருமறை நூல் முழுவதையும் முதலில் இருந்து இறுதிவரை தொடர்வரிசையில் எழுதி வெளியிடும் பணியினைத் திருமறைக் கலாமன்றம் பொறுப்பேற்றுள்ளது. இவ் அரும் முயற்சியினைத் தமிழ் கூறும் நல்லுலகம் தவறாது ஆதரிக்கும் என்ற திடமான நம்பிக்கை நமக்கு உண்டு.

நீ.மரிய சேவியர் அடிகள்
இயக்குநர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாத்திரங்கள்:ஆதாம்,ஏவாள்,காயின்,ஆபேல்.*
*இடம்:கானகச்சோலை. அனைவரும் உறை நிலையில் நிற்க திரை திறபடலாம்*
*பின் உரையாடல்*

ஏவாள்: ஆண்டவன் அருட் கொடைகளை மறந்து, அவனது அன்புக் கட்டளையையும் மீறியதால், இன்ப வனத்தினையும் துறந்து, துன்ப துயரங்கள், நோய் நொடிகள், கஸ்ட நஸ்டங்களுக்கு மத்தியில், பிரசவ வேதனையையும் தாங்கி உங்களைப் பெற்றோம்.

ஆதாம்: நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, களைக்கக் களைக்க, இளைக்க இளைக்க, உழைத்து உங்களைக் கண்ணின் மணிகளென வளர்த்து ஆளாக்கியுள்ளோம்.

காயின்: பெற்றீர்கள்! வளர்த்தீர்கள்! பெற்ற கடமையைச் செய்தீர்கள்! அதற்கேன் வருத்தப்படவேண்டும்?

ஆபேல்: அண்ணா! பெற்றவர் மனம் புண்படலாமா?

ஆதாம்: செல்வங்களே! கஸ்டப்பட்டு உழைத்துப் பெற்று வளர்க்க வேண்டிய துன்ப நிலையில் நாம் படைக்கப் படவில்லை. அது நம்மைப் படைத்தவனின் கட்டளையை மீறியதால் நாமாகத் தேடிக் கொண்ட துயரநிலை.

காயின்: அதற்காக?

ஏவாள்: நீங்களாவது உங்கள் வாழ்க்கையில் இறைவனுக்கு உகந்தவர்களாக, அன்போடும், பண்போடும் நடந்து நாங்கள் கட்டிக்கொண்ட பாவத்தின் கஸ்டச் சுமைகளை இறக்கத் தெண்டியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயின்: நீங்கள் கட்டிக்கொண்ட பாவச் சுமைக்கு நாங்கள் பிராயச் சித்தம் தேடுவதா? அது முடியுமா, தாயே! *(சிரித்தல்)*

ஏவாள்: நாங்கள் செய்த பாவத்தின் கறை, நம் இனம் அனைத்தின் மீதும் படிந்திருப்பதாலேயே அதை நீக்க முயற்சியுங்கள் என்கிறேன்.

ஆபேல்: ஆண்டவன் அன்பைப் பெற்று அவன் அருளையும் மீளப் பெற்றால் நமது இறைவனால் முடியாதது என்று ஏதாவது ஒன்று உண்டா அண்ணா?

ஆதாம்: ஆபேல்! நீ சொல்வது சரி! ஆண்டவன் எமக்கு இட்ட சாபம் நீங்கும்படி அவருக்கு உகந்தவர்களாக நடவுங்கள். அவரின் கோபத்துக்கு எமது கண்ணின் மணிகளான நீங்களும் ஆளாகுமளவுக்கு நடந்து விடாதீர்கள் என்பதற்காகவே இதைச் சொன்னோம்.

ஆபேல்: உங்கள் விருப்பப்படியே நடந்து இறை அருளைப் பெறுவேன்.

ஆதாம்: காயின்?


காயின்: முடிந்தளவு பார்ப்பேன்.

*திரை மூடுதல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி இரண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இடம்: பலி செலுத்தும் இடம்*
*பாத்திரங்கள்: காயின் ஆபேல் இறைவன்.*
*ஆபேல் பலி செலுத்தல்,இங்கு ஒரு கொழுத்த ஆட்டுக் குட்டியுடன் ஆபேல் தோன்றலாம்.இறைவனை பலி பீடத்தின் நேரே உயரத்தில் ஒளி வடிவில் காட்டலாம்*

ஆபேல்: அன்பான இறைவா! எம் பெற்றோர் கட்டிக்கொண்ட பாவக் கறையின் போர்வையைப் போர்த்தியவர்களாக நாம் உள்ள போதும், கருணையும் இரக்கமும் தோய்ந்த உமது கிருபா கடாட்சத்தினால் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வள்ளலே!உமது பேரருளால் என்னிடம் பெருகிவரும் ஆட்டு மந்தைக் கூட்டத்தின் முதல் தெரிவை உமக்குக் காணிக்கையாக்குகிறேன். அன்போடு ஏற்பாய் ஆண்டவனே. *(வணங்கி காணிக்கை செலுத்துதல்)*

இறைவன்; ஆபேல்! அன்போடு நீ அளித்த காணிக்கையை நாம் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டோம் நீயும் உனது மந்தைகளும் குறையேது மின்றி நிறைவோடு வாழ எமது அருள் தந்தோம்.

ஆபேல்: *( ஆச்சரியமும் நன்றியும் மேலிட )* நன்றி, இறைவா, உமது கருணை மழையை என்மேல் என்றும் நிறைவாய் பொழிந்தருளும்.

*வணங்கி எழுந்து மெள்ளச் செல்ல - சற்று நேரத்தில் காயின் மரக்கறி வகைகள் கொண்ட கூடையொன்றுடன் பலி செலுத்த வருதல்*

காயின்: *( பலிப் பீடத்தை ஊன்றிக் கவனித்து விட்டு )* , ம், ஆபேல் தனது மந்தையின் முதற் தெரிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்குக் காணிக்கையாக்கி யுள்ளானே! மெலிந்து நலிந்து போனவற்றை காணிக்கையாகக் கொடுத்துத் தள்ளிவிடாமல், கொழுத்து தழுத்ததை யெல்லாம் கொடுத்துக் கொடுத்தே நாளடைவில் ஒட்டாண்டியாகி விடப்போகின்றான். பாவம்! அவனுக்குப் புத்தி சொல்ல வேண்டும். நானும் காணிக்கை செலுத்துகிறேன். முதற் தெரிவையா கொடுக்கிறேன்? எனது காணிக்கையை இறைவன் ஏற்க மாட்டாரோ? *( காணிக்கையைப் பீடத்தில் வைத்து )* இறைவா! உமக்கு நான் எனது விளைச்சலின் ஒரு பகுதியைக் காணிக்கை யாக்குகிறேன். ஏற்றுக் கொள்வாயாக. எனக்கு வேண்டிய செல்வங்கள் அனைத்தும் தர உம்மை வேண்டுகின்றேன்.

*வணங்கி எழுந்து*


உடனே சென்று எனது தம்பிக்குப் புத்தி சொல்லித் திருத்த வேண்டும்.

*மெள்ளச் செல்ல திரை மூடலாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி மூன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இடம்:மந்தை மேய்க்கும் இடம்*
*பாத்திரங்கள்: ஆபேல்,காயின்*
*ஆபேல் ஏதோ வேலையில் இருக்க காயின் அழைத்தபடி வரல்*

காயின்: ஆபேல்! தம்பி ஆபேல்!

ஆபேல்: அண்ணா! என்ன அவசரமாக வருகின்றீர்கள்.

காயின்: ஒன்றுமில்லை உன்னைப்பற்றிய சிறு கவலை யொன்றை

ஆபேல்: *(ஆச்சரியமாக )* அண்ணா, என்னால் உங்களுக்குக் கவலையா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா அண்ணா?

காயின்: தவறு ஒன்றும் இல்லை நீ உன் ஆடுகளை

ஆபேல்: சொல்லுங்கள் அண்ணா எனது ஆடுகளை என்ன செய்ய வேண்டும்? எனக்கு வயதில் மூத்தவரான உங்கள் புத்திமதிகளை நான் கேளாதிருப்பது முறையாகுமா? ம் சொல்லுங்கள்.

காயின்: ஆபேல்! நீ அன்பும், அறிவும், பண்பும், பணிவும் கொண்டவன் என்பது எனக்குத் தெரியும் இருந்தாலும்

ஆபேல்: அண்ணா! நீங்கள் எதையோ சொல்லத் தயங்குவது போல் தெரிகிறதே.

காயின்: நான் உனது நன்மை கருதி ஏதாவது சொன்னால், கோபித்துவிடமாட்டாயே!

ஆபேல்: அண்ணா! இறைவனுக்கு அடுத்ததாக பெற்றோர், சகோதரரைப் பெரிதாகப் போற்றும் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சொற்கேட்டுக் கோபிப்பதா? சொல்லுங்கள் தவறேதும்: உண்டென்றால் திருந்திவிடுகிறேன்!

காயின்: பெற்றோர், சகோதரர் உறவுகளுக்கு மேலாக நீ அன்பு செலுத்துகின்ற அந்த இறைவனுக்கு.

ஆபேல்: *( பதைபதைத்து )* இறைவனுக்கு ஏதாவது குறை வைத்துவிட்டோமா அண்ணா?

காயின்: இல்லை இல்லை அவர் மீது உனக்குள்ள அளவு கடந்த அன்பு அதனால் நீ செலுத்தும் அதி உன்னதமான காணிக்கை இவற்றை என்னால் சகிக்க முடியவில்லை!

ஆபேல்: அண்ணா! நீங்கள் பேசுவது விபரீதமாக உள்ளதே!

காயின்: விபரீதமல்ல உண்மையை, உள்ளதைச் சொல்கிறேன் அதுவும் உனது நன்மைக்காகவே சொல்கிறேன்.

ஆபேல்: அப்படியென்றால் கடவுளுக்குக் காணிக்கை கொடுப்பது தவறு என்கின்றீர்களா?

காயின்: தாராளமாகச் செலுத்து ஆனால் முதல் தெரிவுகளைக் காணிக்கை செலுத்தி விட்டு மீதமுள்ள, மெலிந்த, நலிந்த மந்தைகளை வைத்து நீ என்ன செய்யப்போகிறாய்? நாளடைவில் உள்ள தெல்லாமிழந்து கஸ்டப்படப் போகிறாயா?

ஆபேல்: *( காதைப் பொத்தியவாறு )* அண்ணா, அவனின்றி அணுவும் அசையாதல்லவா? உலகின் படைப்புகளெல்லாம் அவனருளின்றி வாழுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளருமா? சிந்தியுங்கள்! அவனது படைப்புகளை அவனுக்கு அளிப்பதுதானே நியாயம்.

காயின்: சரி! சரி! ஆனால் முதல் தெரிவை எனக்குத் தா என்று இறைவன் உன்னிடம் கேட்டாரா? நீ அவ்வாறு கொடுப்பதானால் எனது காணிக்கை இறைவன் கண்களுக்குத் தெரியவில்லையே! நீயும் என்னைப் போலவே இரண்டாம் தரங்களைக் காணிக்கையாக்கலாமல்லவா?

ஆபேல்: அளவற்ற நன்மைகளை அள்ளி வழங்கும் இறைவனுக்கு நாம் மட்டும் அளந்தும் தரமிட்டுமா கொடுப்பது?

காயின்: தம்பி, நீ அதிகம் பேசுகிறாய். ஏதோ உனது எதிர்காலம், எனது நன்மை இரண்டையும் சிந்தித்து நடந்தால் உனக்கும் நல்லது, எனக்கும் நல்லது.

ஆபேல்: அண்ணா! இறைவனின் அன்புக்கு மேலாக நான் எதையுமே பெரிதாக நினைக்கவில்லை. அவருக்காக எனது சொத்துக்களையென்ன, உயிரையுமே கொடுக்க நான் தயாராக உள்ளேன்.


காயின்: *(சற்று கோபமாக )* இனியும் உனக்குப் புத்தி சொல்ல நான் விரும்பவில்லை. இறைவன் மேல் நீ கொண்டுள்ள குருட்டுத்தனமான அன்பு உனக்கு நன்மை தராது என்பதை மட்டும் நினைவில் கொள்! நான் வருகிறேன்.

*காயின் கோபமாக வெளியேற,ஆபேல் அவன் போன திசையை செய்வதறியாது பார்த்து நிற்க திரை மூடலாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி நான்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இடம்: காணிக்கை செலுத்துமிடம்*

*பாத்திரங்கள்:காயின்,ஆபேல்,ஆதாம்,இறைவன்.*

*திரை திறக்க ஆபேல் கொழுத்த மந்தையொன்றுடன் மீண்டும் காணிக்கை செலுத்த வரல்*

ஆபேல்: என் இறைவா! படைப்பின் தலைவா! உமது படைப்பினைத் தவிர, உமது அசைவுக்கு இசைய ஆடுகின்ற தன்மையைத் தவிர, நம்மால் ஆகக்கூடியது ஏதுமில்லை என்பதை நான் நன்கறிவேன். இதோ, நீர் எனக்கு தந்ததிலிருந்து முதல் தெரிவினை நிதமும் உமக்களிப்பேன். உம் பாதம் பணிந்திடக் கூட உமது அருள்தான் வேண்டும் ஐயனே!

*(வணங்கிக் கொண்டிருக்கும் போதே காயின் வரல்)*

இறைவன்: (அசரீரி) ஆபேல் உனது அன்புக் காணிக்கையை நாம் ஆசையோடு ஏற்றுக் கொண்டோம். எமது அன்பும் அருளும் உன்மேல் என்றும் உள்ளது.

ஆபேல்: நன்றி ,இறைவா, நன்றி

*எழுந்து வரல். அவ் வேளை காயின் தனது காணிக்கையுடன் அங்கு வரல்*

காயின்: ஆபேல்! காணிக்கை செலுத்திவிட்டு வருகிறாயா? நில்! நானும் காணிக்கை செலுத்திவிட்டு வருகிறேன்.

ஆபேல்: சரி அண்ணா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயின்: *( பலி பீடத்தில் காணிக்கை வைத்து )* இறைவா! நான் தரும் காணிக்கையை ஏற்றுக் கொள். எனக்கு வேண்டிய செல்வம் அனைத்தும் அருளி ஆசீர்வதிப்பாயாக. *( கோபமாக ஆபேலை திரும்பிப் பார்த்தல் )*

இறைவன்: *(அசரீரி)* காயின்! *( காயின் திடுக்குற்று நோக்குதல்)*

இறைவன்: நீ ஏன் கோபமாயிருக்கிறாய்? உன்முகம் ஏன் வாடியிருக்கிறது? நீ நன்மை செய்தால் அல்லவா உனக்கு வெகுமதி கிடைக்கும். தீமை செய்தால் பாவம் உன் வாயிலில் வந்து பதுங்கி நிற்குமன்றோ? அதன் ஆசை உன் மேல் இருக்கும். நீ அதை அடக்கிக் கொள்ள வேண்டும். *( காயின் செய்வதறியாது கைகளைப் பிசைந்தவாறு மௌனமாக நிற்றல். சற்று நேரத்தின் பின் )*

ஆபேல்: அண்ணா! நாம் போகலாமா?

காயின்: *(கோபத்துடன் )* பார்த்தாயா? உனது காணிக்கையை அன்போடும், பரிவோடும் ஏற்கின்ற இறைவன் எனது காணிக்கையை ஏறெடுத்தும் பார்க்கவில்லையே! பார்த்தாயா?

ஆபேல்: என்ன செய்வது? நீங்கள் செலுத்தும் காணிக்கை இறைவனுக்கு ஏற்புடையதாக இல்லைப் போலும் உங்கள் உழைப்பில் முதற் தெரிவையே முதல்வனுக்கு கொடுக்கலாமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயின்: *( மிகுந்த கோபத்துடன் )* முதல் தெரிவைக் கொடுத்துக் கொடுத்தே எனது காணிக்கையின் பெறுமதியைக் கெடுத்துவிட்டாய். நீ துரோகி!

ஆபேல்: *(அதிர்ச்சியுடன் )* அண்ணா! இது என்ன கொடுமை! எனது காணிக்கையால் உங்கள் காணிக்கைக்குக் களங்கம் கற்பித்து விட்டேன் என்பது நியாயமாகுமோ?

காயின்: நியாயம், அநியாயம் கூறுமளவிற்கு நீ பெரியவனாகிவிட்டாயா?

ஆபேல்: அண்ணா! உண்மைக்கும் நீதிக்கும் நேர்மைக்கும் எதிராக நான் ஏதாவது குற்றம் புரிந்திருந்தால் என்னை மன்னியுங்கள் அதற்காக என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள். ஏற்றுக் கொள்ளுகின்றேன்.

காயின்: மடையனே செய்வதும் செய்து பேசியதும் பேசி மன்னிப்பு தண்டனை என்றெல்லாம் வேறு பேசுகின்றாயா? இதோ! பெற்றுக் கொள்.

*(பெரிய கோல் ஒன்றை எடுத்து ஓங்கி அடித்தல்)*

ஆபேல்: ஆ. இறைவா ஆ. ஆ.

*தலையைப் பொத்தியவாறு மெள்ள மெள்ள மயங்கி வீழ்ந்து துடித்து இறத்தல். இவ் வேளை அவ்விடமெல்லாம் பயங்கர ஓசைகள் ஒலிப்பது போல் காட்டலாம்*

காயின்: *( பதறித் துடித்து )* ஆ! இறந்துவிட்டான் *( பயந்து பயந்து யோசித்து )* இவனது உடலை எங்காவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்துவிட வேண்டும். *( காயின் அவசர அவசரமாக ஆபேலின் உடலை பற்றை ஒன்றுக்குள் மறைத்து வைத்துவிட்டு விழி பிதுங்கப் பதுங்கிநிற்றல்)*

இறைவன்: *(அசரீரி)* காயின்! காயின்! *(காயின் பதறுதல்)*

இறைவன்: *(அசரீரி)* காயின்! உன் தம்பி எங்கே?

காயின்: *( தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு )* தம்பியா அ. அ. நான் காணவில்லையே.

இறைவன்: ஆபேல். எங்கே !எங்கே !

காயின்: அவனுக்கு நான் என்ன காவலாளியா?

இறைவன்: *(அசரீரி)* காயின்! உன் தம்பியின் அவலக் குரல் தான் எனக்குக் கேட்டதே.

காயின்: *( நடுங்கியவாறே )* இறைவா!..

இறைவன்: *(அசரீரி)* காயின்! இதோ கேள்! பூமி தன் வாயை திறந்து உன் கையால் சிந்திய உன் தம்பியின் குருதியை உண்டதால் இன்று முதல் நீ இப் பூமியில் சபிக்கப்பட்டிருப்பாய். இப் பூமியில் நீ பயிரிட்டால் அது உனக்குப் பலனைதராது. பூமியில் நீ நிலையற்றவனும் நாடோடியுமாயிருப்பாய்!

காயின்: *( நடுங்கியவாறே )* இறைவா! நான் புரிந்த செயல் மன்னிக்க முடியாதளவு பெரியதும் கொடியது மென்பதைப் புரிந்து கொண்டேன். அதற்கு தண்டனையாக, உமது கண்பார்வையினின்றும் என்னை அப்புறப்படுத்தி நாட்டை விட்டு துரத்தி பூமியில் நிலையற்றவனாய் நாடோடியாய் அலையவிடுகிறீரே! அப்படியானால் என்னை காணுகின்ற எவனும் என்னைக் கல்லால் எறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்று விடுவானே! ஐயோ! நான் என்ன செய்வேன். *(அழுது புலம்புதல்)*

இறைவன்: *(அசரீரி)* அஞ்சாதே! அப்படி நடக்கவே நடக்காது! உன்னைக் கொல்பவன் ஏழு மடங்கு பழியைச் சுமப்பான். உன்னைக் காண்பவன் எவனும் உன்னைக் கொல்லாதவாறு உனக்கு அடையாளம் இடுவோம். *( இவ்வேளை ஆதாம், ஏவாள் வருதல் )*

ஏவாள்: *( பதற்றத்துடன் காணப்படல் )* என்றுமில்லாதவாறு ஏதோ ஒரு விபரீத உணர்வு, என்னை ஊடுருவுகின்றதே இறைவா! என்ன சோதனையோ?

ஆதாம்: ஏவாள்! அன்றொரு நாள் உனக்கு ஏற்பட்ட விபரீத உணர்வினாலே நாம் மனித இனத்தின் மேல் அழியாத பாவக் கறையை படிய வைத்தோம் என்பதை மறந்து விட்டாயா?

ஏவாள்: மறக்க முடியுமா? அன்று தொட்டு நாம் அனுபவிக்கும் துன்ப வேதனைகள் அப்பப்பா அவற்றிற்கும் மேலாய் இன்று ஏதோ ஒரு பெருந்துயர உணர்வொன்று என்னை ஆட் கொண்டுள்ளது. ஏனோ என் மனம் பதட்டப்படுகின்றது. இறைவா! இனியாவது எங்கள் மனதில் நிம்மதியைத் தர மாட்டாயா?

ஆதாம்: ஏவாள்! வாழ்வாங்கு வாழ்ந்திருக்க வேண்டிய நாம் இன்று இப்படியாகி விட்டதற்குக் காரணமே நாம் தானே. பின்பு ஏன் அந்த இறைவனைக் குறை கூற வேண்டும்? இன்னும் எங்களை வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதற்கு அவருக்கு நன்றியல்லவா கூற வேண்டும்.

*( இவ் வேளை ஏவாள் ஆபேல் அங்கே கிடப்பதைக் கண்டு )*

ஏவாள்: அதோ ஆபேல்.

ஆதாம்: அவன் நமது பாதங்களின் ஓசையிலேயே விழித்தெழுந்துவிடுவானே.

ஏவாள்: ஆமாம்! வழமைக்கு மாறான தூக்கம்! ஆழமான தூக்கம்!

ஆதாம்: தூங்குபவன் போலவா கிடக்கிறான்?

ஏவாள்: *( அருகே சென்று குனிந்து பார்த்து )* ஆபேல் *( உடலைப் புரட்டிப் பார்த்து )* ஆ இரத்தம் இரத்தம்.

*(இவ்வேளை ஆதாமும் சேர்ந்து ஆபேலைப் பார்த்தல்)*

ஏவாள்: ஐயோ! இது என்ன விபரீதம்! மகனே ஆபேல்! *(மகனே ஆபேல் என்பது இரண்டொரு முறை எதிரொலி செய்யலாம் )* இறைவா! எம்மைத் தண்டித்தது போதாதென்று உமது தண்டனையின் கரங்களை எமது பிள்ளைகள் மீதுமா பதித்துவிட்டீர்?

*(இவ்வேளை ஆதாம் அவனருகே இரத்தம் தோய்ந்த கோல் ஒன்றைக் கண்டெடுத்து)*

ஆதாம்: ஏவாள்! இது மிகுந்த துயர் தரும் நிகழ்வு தான் ஆனால், எடுத்ததற்கும் அந்த இறைவனையே குற்றவாளியாக்காதே. இதோ! இந்தக் கோலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார். இதிலே படிந்திருக்கும் இரத்தக் கறையைப் பார். இதற்குப் பின்னும் இறைவனை சந்தேகிக்கலாமா? இங்கு தான் ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்கிறது.

ஏவாள்: ஆமாம் ஆமாம் இதென்ன கொடுமை! யார் இதைப் புரிந்தார்களோ?

*( இவ்வேளை காயின் அழுதவாறே அங்கு வரல் )*

காயின்: அம்மா

ஏவாள்: என்ன? நீயும் அழுதுகொண்டே வருகிறாய்? இது வேறு துயரா? சொல் மகனே!

காயின்: அம்மா! உங்கள் அறிவுரையைக் கேளாமல் பாவம் புரிந்து விட்டேன்.

ஆதாம்: என்ன. நீயுமா?

காயின்: ஆம்! என் தம்பி ஆபேலை அடித்துப் பிணமாக்கி விட்டேன். அம்மா! உயிரைப் பறித்துவிட்டேன்.

ஆதாம்: என்ன ? ஆபேலைக் கொன்றுவிட்டாயா?

ஏவாள்: இறைவா!உமது கட்டளையை மீறி, முதல் பாவத்தை புரிந்தது போதாதென்று, எம் பிள்ளையான காயின் பூமியில் முதற் கொலையையும் புரிந்து உமக்கும், மனித இனத்திற்கும் பெரும் களங்கத்தை உண்டு பண்ணிவிட்டானே.

காயின்: *( ஓடிச்சென்று பெற்றோரின் காலடிகளில் விழுந்து வானகத்தை நோக்கி )* இறைவா! என் பெற்றோர், உமக்கு உகந்தவனாக வாழும்படி கூறியும் கேளாது, உமக்கு உகந்தவனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த என் தம்பியையும் வாழ விடாது கொலை புரிந்து பெரும் பாவத்தை கட்டிக் கொண்டேனே தண்டனையும் பெற்றுக் கொண்டேனே. இறைவா! அம்மா! அப்பா! எனக்கு மன்னிப்பே கிடயாதா?

*மூவரும் சேர்ந்து அழுதபடி நிற்க திரை மூடுதல்*

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் நாடக வரலாற்றில்

## ---மைல் கல்கள்---

### திருமறைக் கலாமன்றத்தின் சாதனைகள்.

**அன்று**

★ 1968 ம் ஆண்டில் **களங்கம்** என்ற முழுநீள குறியீட்டு இசை, உரை நாடகச் சித்திரத்தை, கதாநாயகனை மேடையில் காட்டாது தமிழில் முதன் முதல் அரங்கேற்றியது...

★ 1971 ம் ஆண்டு முன்னூறுக்கு மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு, முந்நூறு அடி நீளமும், முன்னூறு அடி அகலமும், நூறு அடி உயரமும் கொண்ட அரங்கில் யாழ் கோட்டையைப் பின்னணியாகக் கொண்டதுமான நான்கரை மணித்தியால **அன்பில் மலர்ந்த அமர காவியம்** எனும் நாடகத்தை மேடையேற்றியது.

★ 1973 ல் முதன் முதல் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு நாடகக் குழுவாகச் சென்று திருச்சி தேவர் மண்டபத்தில் **பலிக்களம்** என்னும் பக்தி நாடகத்தை மேடையேற்றியது.

★ 1974 ம் ஆண்டு **கதையும் காவியமும்** என்ற அங்க அசைவு நிகழ்ச்சியை 15 நிமிடங்களுக்கு மேடையேற்றி, நிகழ்ச்சி நிறைவுறும் முன்னரேயே ஏழுமுறை பார்வையாளர்களின் கரகோஷப் பாராட்டைப் பெற்றது.

★ இலங்கையில் முதன் முதலாகப் **பலிக்களம்** என்னும் ஒளிப்பதிவு நாடாவை (வீடியோ)த் தயாரித்தது.

**இன்று**

★ முப்பத்து நான்கு கலை பண்பாட்டுப் பிரிவுகளைக் கொண்ட ஈடு இணையற்ற அமைப்பாக விளங்குவது.

★ நாட்டில், வேறெங்கும் இல்லாத சிறுவர்கலைக் கூடத்தைச் சிறப்புற நடத்துவது.

★ நாடகக்களப் பயிற்சியில் யோகக் கலையைப் புகுத்திச் செயற்படுத்துவது.

★ தமிழ் நாடக வரலாற்றில் ஐம்பெரும் காப்பியங்களை முதன் முறை மேடையேற்றியது.

★ வார்த்தைகள் அற்ற நாடகம் என்னும் புது முறையை நாடக உலகில் புகுத்தியது.

★ கொழும்பில் இருபது நாட்களில் (15.02.93-05.03-93) வெவ்வேறு வகைப்பட்ட கலை நிகழ்ச்சிகளை (இசை நாடகம், மௌன நாடகம், பக்தி, இசை, உரை நாடகம், இசைக் கதம்பம் போன்றவற்றைச்) சிறு எண்ணிக்கையான கலைக் குழுவுடன் மேடையேற்றியது.

★ வடக்கிற்கும் தெற்கிற்கும் ஒரே ஒரு கலைப் பாலமாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Our Gratitude to**

**AUSTRIA'S DREIKONIGSAKTION**

**DER KATH. JUNGSCHAR**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு

CENTRE FOR PERFORMING ARTS

திருமறைக் கலாமன்றம்.

SALE
1 00

238, MAIN STREET,
JAFFNA,
SHRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY: UNIE - ARTS (PVT) LTD. TP. 445915